DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.188/2016** |
| Deposition of witness for | - P.W.2 |
| Name | - Swanthikha |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.11.2021
(சாட்சி வயது 10 என்பதால் அவரது சாட்சியம் அளிக்கும் தகுதி குறித்து விசாரிக்கப்பட்டார்.)

கேள்வி: என்ன படிக்கிறாய்?

பதில்: 5-ஆம் வகுப்பு படிக்கிறேன்.

கேள்வி: எந்த பள்ளியில் எங்கு படிக்கிறாய்?

பதில்: உத்தமபாளையத்தில் எஸ்.ஏ.வி.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் படிக்கிறேன்.

கேள்வி: இது எந்த இடம் என்று தெரியுமா?

பதில்: கோர்ட்

கேள்வி: உண்மை என்ன, பொய் என்ன உனக்குத் தெரியுமா?

பதில்: தெரியும்.

கேள்வி: நீதிமன்றத்தில் எதை சொல்ல வேண்டும்?

பதில்: உண்மையைச் சொல்ல வேண்டும்.

கேள்வி: பொய் சொன்னால் என்ன செய்வார்கள்?

பதில்: தண்டனை கொடுப்பார்கள்.

( சாட்சி கேட்ட கேள்விக்கு புரிந்து கொண்டு பதில்கள் சொல்லியதால் சாட்சியம் அளிக்க தகுதியான நபர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது)

**முதல் விசாரணை**

நான் ஸ்கூல் முடிந்து நான் வீட்டிற்கு வந்த போது என் அம்மா கீழே வந்து என்னை அழைத்துக் கொண்டு என் வீட்டிற்கு வந்தார். நான் என் வீட்டிற்கு வந்தவுடன் என் அம்மா எனக்கு சாப்பாடு கொடுத்தார்கள். அந்த சமயத்தில் விசு சித்தப்பா வந்தார். அதன் பிறகு கொஞ்ச நேரத்தில் அவரது பிரெண்ட் வந்தார். அம்மா அவர்கள் இருவருக்கும் டீ போட்டு கொடுத்தார் நான் தூங்கி விட்டேன். நான் தூங்கி எழுந்து பார்த்த போது என் அம்மா பெட்டில் படுத்திருந்தார். அப்போது வேறு யாரும் இல்லை. நான் என் அம்மாவை எழுப்பி பார்த்தேன். என் அம்மா எழுந்திருக்கவில்லை. கொஞ்ச நேரத்தில் என் அப்பா வந்தார். அப்பா வந்து என் அம்மாவை எழுப்பி பார்த்தாங்க எழுந்திருக்கவில்லை. என் அப்பா அழுது கொண்டே என் அம்மாவை தூக்கிக் கொண்டு போனார். நான் பக்கத்து வீட்டு ஆன்ட்டி வீட்டில் இருந்தேன். அப்பா இரவு வந்து என்னிடம் வீட்டிற்கு வந்து யார் வந்தார்கள் என்று கேட்டார். அவர்களிடம் விசு சித்தப்பாவும், அவரது பிரண்ட்டும் வந்தார் என்று சொன்னேன். என் அம்மா இறந்ததற்கு பிறகு என்னை மதுரையில் உள்ள நீதிமன்ற கட்டிடத்தில் உள்ள வேறு ஒரு நீதிமன்றத்திற்கு என் அப்பா, தாத்தா, போலீசார் என்னை கூட்டி சென்றார்கள். அந்த நீதிமன்றத்தில் இப்போது சொல்லியவாறு சொன்னேன். என்னிடம் சொல்லியவாறு சொன்னேன். என்னிடம் காட்டப்படும் நான் வாக்குமூலம் கொடுத்த நீதிமன்ற அறை பூட்டியிருந்தது. உள்ளே நானும், இந்த வாக்கமூலத்தை எழுதியவரும் இருந்தார்கள். அந்த அறையினுள் வேறு யாரும் இல்லை. என்னிடம் காட்டப்படும வாக்குமூலத்தில் உள்ள கைரேகை நான் வைத்தேன். அதில் உள்ள A, B,C,D,E,F,G,I,H என்று நான்தான் எழுதினேன். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆகும்.

எதிரி தரப்பு கு.வி:

பள்ளியில் பேச்சு போட்டியில் கலந்து கொள்ள மாட்டேன். நான் தூயதமிழில் பேசுவதற்கு தமிழில் சொல்லி கொடுத்தார்கள். நீதிமன்றத்தில் சொல்வதற்கு யார் சொல்லி கொடுத்தார்கள் என்றால் நானாகத்தான் சொன்னேன். காலையில் நான் அரசு வழக்கறிஞரை பார்க்கவில்லை. போலீஸ்காரர்களை நான் பார்க்கவில்லை. என் அம்மா இறந்த அன்று என் தாத்தா பாட்டி வீட்டில் இருந்தேன். நான் எங்கு இருந்தேன் என்று நினைவில்லை. நான் எனது வீட்டில் அன்று இரவு இருக்கவில்லை. எனக்கு எதிரியின் அம்மா அப்பாவை தெரியும். அன்றைய தினம் இரவு எதிரியின் அம்மா அப்பா கூட இருந்தார்களா என்று எனக்குத் தெரியாது. நான் ஸ்கூலில் இருந்து வந்த பிறகு அன்றைய தினம் மெக்கானிக் வரவில்லை. எனது வீட்டில் டி.வி தெரிந்தது. வால்யூம் கேட்கவில்லை. எனது வீட்டில் டி.வி போட்டால் சத்தம் பக்கத்து வீடுகளுக்கு கேட்குமா என்றால் கேட்காது. எங்களது வீட்டு டி.வியில் வால்யூம் இருந்து டி.வி போட்டால் சத்தம் கேட்குமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அன்றைய தினம் இரவு நான் என் தாத்தா பாட்டியுடன் இருக்கும் போது என் அப்பா வந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அன்றைய தினம் இரவு என்னை என் அப்பா எங்கு வந்து பார்த்தார் என்று எனக்குத் தெரியாது. என் அம்மா இறந்த

அன்றைய தினம் நான் என் தாத்தா பாட்டியுடன் தூங்கினேன். என் அம்மா இறந்த மறுநாள் காலையில் என் அப்பா இருந்தாரா என்றால் என் அப்பா மருத்துவமனையில் இருந்தார். என் அம்மாவிற்கும், அப்பாவிற்கும் அடிக்கடி சண்டை நடக்கும் என்றால் நடக்காது. என் அம்மா கோபித்து கொண்டு எதிரியின் வீட்டில் 10 நாட்கள் இருந்தார்களா என்றால் எனக்குத் தெரியாது. என் அம்மா வெளியே போயிருந்தால் என் அப்பா எனக்கு சமைத்து கொடுப்பாரா என்றால் என் அப்பாவும் என் அம்மாவோடு வெளியே போய் விடுவார். என் அம்மா இல்லாத நேரங்களில் யார் எனக்கு சமைத்து கொடுப்பார்கள் என்றால் எனக்குத் தெரியாது. என் அம்மா இறந்த அன்று என் வீட்டிற்கு நாய், போலீஸ் வந்தார்களா என்றால் நான் வேறு எங்கேயோ போய் விட்டேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஅவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.